## பருத்தி ஏற்றுமதிக்குத் தடை

First Published : 06 Mar 2012 03:09:19 AM IST

புது தில்லி, மார்ச் 5: பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது. மறு உத்தரவு வரும் வரை ஏற்றுமதி தடை நீடிக்கும் என்று வெளிநாடு வர்த்தக இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

ஏற்றுமதி செய்வதற்கு முன்னரே பதிவு செய்திருந்த சான்றிதழ்களும் செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பருத்தி உற்பத்தி அக்டோபர் முதல் செப்டம்பர் வரையான சீசனில் 7.5 லட்சம் பேல்கள் குறைந்து 342 லட்சம் பேல்களாக இருக்கும் என்று அமெரிக்க வேளாண் துறை (யுஎஸ்டிஏ) அறிவித்துள்ளது. ஒருபேல் 170 கிலோ பஞ்சைக் கொண்டது.

2010-11ம் ஆண்டு இந்தியாவின் பஞ்சு உற்பத்தி 330 லட்சம் பேல்களாக இருந்தது. இந்த ஆண்டு ஏற்கெனவே 85 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு 70 லட்சம் பேல் பருத்தி ஏற்றுமதி செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டில் மில்களின் தேவை 216 லட்சம் பேல்களாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## உழவர்களுக்கான பயிற்சி முகாம்

First Published : 05 Mar 2012 10:36:02 AM IST

உசிலம்பட்டி, மார்ச் 4: மதுரை மாவட்டம், உசிலம்பட்டி மாஸ்டர் தொண்டு நிறுவனம், இந்தியன் வங்கி மற்றும் நபார்டு வங்கி இணைந்து விவசாயிகள் முன்னோடித் திட்டங்களை அறிந்து கொள்வதற்கான பயிற்சி முகாமை நடத்தின.

முகாமுக்கு நபார்டு வங்கியின் துணைப் பொது மேலாளர் சங்கர்நாராயணன் தலைமை வகித்தார். இந்தியன் வங்கி மேலாளர் கேசவன் துணைப் பொது இயக்குநர் கார்த்திகேயன் தோட்டக் கலையில் விவசாயிகள் 100 சதவீதம் மானியம் பெறுவது குறித்து விளக்கினர்.

மாஸ்டர் தொண்டு நிறுவனத் தலைவர் ஏ.ராஜ்குமார் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் ஓம்பிரகாஷ் நன்றி கூறினார். பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 30 விவசாயிகள் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## வேளாண் பணிகளுக்கும் நூறுநாள் வேலை திட்டம் விரிவு

First Published : 05 Mar 2012 12:18:52 PM IST

காங்கிரஸ் விவசாய பிரிவு மாநிலத் தலைவர்

ஈரோடு, மார்ச் 4: மகாத்மா காந்தி தேசிய வேலைஉறுதித் திட்டத்தை வேளாண் பணிகளுக்கும் விரைவில் விரைவுப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்று தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு மாநிலத் தலைவர் எஸ்.பவன்குமார் கூறினார்.

ஈரோட்டில் அவர் செய்தியாளர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை அளித்த பேட்டி:

தமிழகத்தில் மின்வெட்டால் விவசாயிகள், தொழிலாளிகள், மாணவ மாணவிகள் என அனைத்துத் தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ளனர். 7 கோடி மக்களையும் பாதிக்கும் முக்கியப் பிரச்னையாக மின்வெட்டு பிரச்னை உருவெடுத்துள்ளது.

தமிழகத்தில் 3,000 முதல் 4,000 மெகாவாட் வரை இப்போது மின்பற்றாக்குறை இருந்து வருகிறது. கூடங்குளம் அணு மின்நிலையம் திறக்கப்பட்டால் தமிழகத்துக்கு உடனடியாக 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். இதை யூனிட்டுக்கு ரூ. 2.50 விலையில் வாங்க முடியும்.

அதேநேரத்தில் வெளிமாநிலங்களில் மின்சாரத்தை வாங்கினால் யுனிட்டுக்கு ரூ. 7 முதல் ரூ. 10 வரை செலவாகும். எனவே, கூடங்குளம் அணு மின்நிலையத்தை உடனடியாகத் திறக்க மத்திய அரசுக்கு, மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

முதல்வர் ஜெயலலிதா மனது வைத்தால் ஒரே நாளில் கூடங்குளம் அணுஉலையைத் திறக்க முடியும்.

மின்வெட்டு காரணமாக தமிழகத்தில் வேளாண் உற்பத்தி 30 சதவீதம் வரை குறைந்துள்ளது. பள்ளிகளில் ஜெனரேட்டர் அமைக்கும் திட்டம் சாத்தியமானது அல்ல. இரவு நேரத்தில் மாணவ மாணவிகள் படிக்கும்போது மின்வெட்டு ஏற்படாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு வங்கிகளில் பயிர்க் கடன் தாமதமின்றிக் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயக் கடனை விவசாயிகளுக்கு மட்டும்தான் வழங்க வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய வேலைஉறுதித் திட்டத்தை வேளாண் பணிகளுக்கும் விரிவுபடுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான வரைவு மசோதா தயாரிக்கப்பட்டு அடுத்த மக்களவைக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட உள்ளது.

அதன்படி நாற்று நடும்போது ஏக்கருக்கு 8 நாள்களும், அறுவடை காலங்களில் 4 நாள்களும் இத்திட்டத்தை விவசாயிகள் பயன்படுத்த முடியும். தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு சார்பில் இக்கோரிக்கை தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது.

அதேபோல நெடுஞ்சாலை, அரசின் தொழிற்சாலைகள் உள்ளிட்டவற்றுக்காக நிலத்தைக் கையகப்படுத்தும்போது விவசாயிகளுக்கு 35 ஆண்டுகள் பங்குத்தொகை கிடைக்கும் வகையில் சட்டத்திருத்தம் செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது என்றார்.

பேட்டியின்போது தமிழ்நாடு காங்கிரஸ் விவசாயிகள் பிரிவு மாநில துணைத் தலைவர்கள் சேலம் செப்கத் அலி, மன்னார்குடி சுதாகர், ஈரோடு மாவட்டத் தலைவர் விஜயகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகளுக்கு வேண்டுகோள்

First Published : 05 Mar 2012 12:02:39 PM IST

கோபி, மார்ச் 4: கீழ்பவானி பாசன விவசாயிகள் சபை பகிர்மான கமிட்டி தலைவர் கே.என்.செங்கோட்டையன், செயலர் பா.மா.வெங்கடாசலபதி ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள்:

கீழ்பவானி பாசன வாய்க்காலில் புன்செய்ப பயிருக்கு நீர் திறக்கப்பட்டு விதைப்பு செய்யப்பட்டுள்ளது. பல இடங்களில் அறுவடை மற்றும் விதைப்பின்போது இயந்திரங்கள் பயன்படுத்துவதால் கொப்பு வாய்க்கால்கள் சேதமடைந்து நீர் நிர்வாகத்துக்கு இடையூறு உள்ளதாகவும், பாசனநீர் கிடைப்பதில்லை எனவும் கடைமடைப் பகுதி விவசாயிகள் புகார் தெரிவிக்கிறார்கள்.

எனவே கீழ்பவானி பாசனத் திட்டத்தில் கொப்பு வாய்க்காலில் செல்லும் நீரை தடை செய்வது, கொப்பு வாய்க்கால்களை சேதப்படுத்துவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

கால்நடைகளை வாய்க்கால் கரைகளில் மேல்பகுதியில் கட்டி தீவனப் பொருட்கள் இடுவதால் கழிவுப் பொருட்கள் வாய்க்காலில் விழுந்து பாசன வாய்க்காலில் நீர் ஓட்டத்தை தடை செய்து விடுகிறது. இதனால் டிராப்கள் அடைக்கப்பட்டு, வாய்க்கால்கள் உடைப்பு ஏற்படுவதால் கடைமடைப் பகுதிகளுக்கு நீர் கொண்டு செல்வதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. இதை விவசாயிகள் தவிர்க்க வேண்டும்.

÷துறைக்குச் சொந்தமான இடங்களில் வாய்க்கால் கரைகளை ஆக்கிரமிப்பு செய்து மரங்களை தவறாக வெட்டுவது, பாசனநீர் பற்றாக்குறைக்காக மதகுகள், குழாய்கள், பூட்டுக்கள் ஆகியவற்றை சேதப்படுத்துவது போன்ற செயல்களையும் விவசாயிகள் தவிர்க்க வேண்டும்.

தடையில்லாச் சான்று பெறல், பாசன நீர் பற்றாக்குறை, கொப்பு வாய்க்கால் பராமரிப்புப் பணி மற்றும் பாசனநீர் தேவை இருப்பின் பொதுப்பணித்துறை அதிகாரிகள், பகிர்மான கமிட்டி, பாசனசபை நிர்வாகிகளைத் தொடர்பு கொண்டு மனுக்களை கொடுத்து சீரான நீர் நிர்வாகத்துக்கு விவசாயிகள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

## பவானிசாகர் நீர்மட்டம்

First Published : 05 Mar 2012 12:01:32 PM IST

ஈரோடு, மார்ச் 4: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி 67.43 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 184 கனஅடி நீர் வந்தது. ஆற்றில் 2,200 கனஅடியும், வாய்க்காலில் 2,200 கனஅடியும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 9.91 டி.எம்.சி.

## முட்டை விலை

First Published : 05 Mar 2012 12:04:47 PM IST

நாமக்கல், மார்ச். 4: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.84, சென்னையில் ரூ. 2.92.கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு ஞாயிற்றுக்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.52, முட்டைக் கோழி கிலோ ரூ.25.

## மேட்டூர் அணை நீர்மட்டம்

First Published : 05 Mar 2012 12:12:06 PM IST

ஞாயிற்றுக்கிழமை

நீர்மட்டம் : 80.80 அடி

அணைக்கு நீர்வரத்து : 516 கன அடி

நீர் வெளியேற்றம் : 1,280 கன அடி

நீர் இருப்பு : 42.75 டி.எம்.சி.

தினமலர்
உண்மையின் உரைகல்

## சின்ன வெங்காயம் விலை குறைவு: வீதியில் கூவி விற்பனை

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,05:57 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் சின்ன வெங்காயம் அறுவடை பணிகள் நடந்து வரும் நிலையில், சரியான விலை கிடைக்காததால், விவசாயிகள் வீதிகளில் கூவி விற்பனை செய்ய துவங்கியுள்ளனர்.

விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் இறைவை பாசன பகுதியில் அதிக அளவில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் சுழற்சி முறையில் வெங்காயம் சாகுபடி செய்யப்படுகிறது.

குறிப்பாக தர்மபுரி, பென்னாகரம், காரிமங்கலம், பாலக்கோடு, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி ஆகிய தாலுகாவில் 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். கடந்தாண்டு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைத்ததால், அதிக அளவில் விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் சின்ன வெங்காயம் அறுவடை துவங்கிய போது, 18 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் கிலோவுக்கு விலை கிடைத்தது. அதனால், தொடர்ந்து நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்புடன் இருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

கடந்த 20 நாட்களில் வெங்காயத்தின் விலை படிப்படியாக குறைந்தது. இதற்கு காரணம் பெரிய வெங்காயம் உற்பத்தி அதிகரிப்பால் அதன் விலையும் குறைந்ததால், சின்ன வெங்காயத்தின் விலை தற்போது, கிலோ 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காததால், விவசாயிகள் வீதிகளிலும், விவசாய தோட்டங்களிலம் கூவி, கூவி வெங்காயம் விற்பனை செய்கின்றனர். இருந்த போதும், விற்பனையும் மந்த கதியில் நடந்து வருகிறது.

## வெயிலை சமாளிக்க சோற்றுக் கற்றாழை தயாரிப்புகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,22:04 IST

கருத்தை பதிவு செய்ய

கோடை வெப்பத்தில் இருந்து தப்பிக்க, சோற்றுக் கற்றாழையில் தயாரான பொருட்கள் விற்பனை துவங்கியுள்ளது.கோடை வெயில் துவங்கி விட்டது. இதிலிருந்து தப்பிக்க, சென்னை வாசிகள் தயாராகி வருகின்றனர்.

அம்பத்தூர் உழவர் சந்தையில், சுதேசி தன்னுதவி குழுக்கள் கூட்டமைப்பின் சார்பாக, சோற்றுக் கற்றாழையில் தயாரான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

சோற்றுக் கற்றாழைச் சாறு, சோப்பு, கூந்தல் தைலம், ஷாம்பூ, முகப்பூச்சு பவுடர், போன்றவையும் ஊறுகாய், தேன்சாறு, நன்னாரி சர்பத், சமையலுக்காக சுத்தம் செய்யப்பட்ட சோற்றுக் கற்றாழை என, பல்வேறு வகையில் விற்பனை களைகட்டியுள்ளது.

பானம்

உடல்சூடு அதிகரிக்கும் போது மூலநோய் ஏற்படுகிறது. சூட்டை தணித்து மூலநோயை விரட்டும் வல்லமை கொண்டது சோற்றுக் கற்றாழை.

ரத்த அழுத்தம், தலை சுற்றல், நரம்பு தளர்ச்சி, கை கால் குடைச்சல், கால் பாதம் எரிச்சல், கண் எரிச்சல், பித்தம், வயிற்றுவலி, சர்க்கரை நோய் போன்றவற்றை கட்டுப்படுத்தி, குளிர்ச்சியூட்டுகிறது. குடல் புண்ணை ஆற்றுகிறது. மூளையை புத்துணர்ச்சியுடன் பாதுகாக்கிறது. தேவையற்ற கொழுப்பு, மாவுப் பொருட்களை அகற்றுகிறது. மூச்சுத்திணறலை போக்குகிறது.

சோப்

இது பின்விளைவுகள் அற்றது. வெயிலின் தீவிரத்தால் ஏற்படும் முகப்பரு, கருவளையம், நிறம் மங்கல் போன்ற பின்விளைவுகளை தவிர்க்கும் தன்மையுடையது.

கூந்தல் தைலம்

நரைத்த முடியை கருமையாக்குகிறது. கூந்தலில் பொலிவை ஏற்படுத்தும். உடல் சூட்டைத் தணிக்க வல்லது.

முகப்பூச்சு

முகப்பரு, சூட்டுக் கொப்புளங்கள், கருவளையங்கள் போன்றவற்றை தவிர்த்து, முகப்பொலிவுக்கு வழிவகுக்கிறது.

தேன் சாறு

இரத்த ஓட்டத்தை சீராக்குகிறது. உடல் பருமனை குறைக்கிறது. நீரிழிவு நோயை கட்டுப்படுத்துகிறது. மலச்சிக்கலை போக்குகிறது. மூட்டுவலியை நீக்குகிறது.

திசுக்களுக்கு உயிரூட்டி பாதுகாக்கிறது. ஒவ்வாமையை போக்குகிறது. நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கிறது.

## வேளாண் விற்பனை வாரியம் விவசாயிகளுக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,22:43 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் :தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் சார்பில் விவசாயிகளுக்கான பயிற்சி குறிஞ்சிப்பாடியில் நடந்தது.

வேளாண் துணை இயக்குனர் தனவேல் தலைமை தாங்கினார். இப்பயிற்சியில் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் முனைவர் கிறிஸ்டி நிர்மலா மேரி வேளாண் விளைப் பொருட்களுக்கான அறுவடை பின் செய் நேர்த்தி, தரம் பிரிப்பு மதிப்பு கூட்டுத் தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். தோட்டக்கலை விளைபொருட்கள் அறுவடை பின் செய்நேர்த்தி, மதிப்பு கூட்டு தொழில் நுட்பங்கள் குறித்து பாலூர் காய்கறி ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் முனைவர் பாபு விளக்கினார்.

காய்கறி மற்றும் பழப்பயிர்களின் சந்தை அறிவுத்திறன், சந்தைத் தகவலால் விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து தமிழ்நாடு வேளாண்மை பல்லைக்கழக சந்தை பகுப்பாயினர் கார்த்திக் விளக்கினார்.

பயிற்சியில் 50 விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர்.சதீஷ் நன்றி கூறினார்.

## காய்கறி மார்க்கெட்டில் சேர்மன் ஆய்வு

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,22:38 IST

கருத்தை பதிவு செய்ய

பண்ருட்டி :பண்ருட்டி காய்கறி மார்க்கெட்டில் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து நகரமன்ற தலைவர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பண்ருட்டி காய்கறி மார்க்கெட்டில் ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து நகரமன்ற தலைவர் பன்னீர்செல்வம், நகராட்சி கமிஷனர் ராதா, கட்டட ஆய்வாளர் குணசேகர், சர்வேயர் திருநாவுக்கரசர் உள்ளிட்டோர் நேற்று ஆய்வு செய்தனர். ஆய்வின் போது மார்க்கெட்டிற்கு பொதுமக்கள் வந்து செல்ல வசதியாக வியாபாரிகளே ஆக்கிரமிப்புகளை அகற்றிக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது. 25 அடி அகலத்தில் நடுவில் சாலை அமைப்பது குறித்தும், மார்க்கெட்டில் ஆடு மாடுகள் வராமல் தடுக்க நுழைவு வாயில் முன்பு தரைத்தளத்தில் பைப்புகள் பதிப்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

கவுன்சிலர்கள் ராஜதுரை, ராமதாஸ், முகமதுபாரி, சங்கர், பணி ஆய்வாளர் சாம்பசிவம் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு வழிகாட்ட ஒருங்கிணைந்த கையேடு

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,02:39 IST

கருத்தை பதிவு செய்ய

அன்னூர் : சர்க்கார் சாமக்குளம் வட்டாரத்தில் நடந்த முகாமில், ஒரே நாளில் 849 விவசாயிகளிடம், மண் மாதிரி பெறப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் பல்கலை மற்றும் சர்க்கார் சாமக்குளம் வட்டார வேளாண்துறை சார்பில், மண் மாதிரி சேகரிப்பு மற்றும் சிறு, குறு விவசாயிகள் கணக்கெடுப்பு முகாம், எஸ்.எஸ்.குளம் பகுதியில் நேற்று முன் தினம் நடந்தது.

வேளாண் கல்லூரி முதல்வர் ராஜராஜன் பேசுகையில்,

""வேளாண்துறை எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க, அரசுக்கு பல்வேறு புள்ளி விபரங்கள் தேவைப்படுகின்றன. அதற்காகவே இந்த கணக்கெடுப்பு நடக்கிறது,'' என்றார்.

வேளாண் கல்லூரி இயற்கை வள மேலாண்மை இயக்குனர் வேலு பேசுகையில்,""மண் பரிசோதனை செய்து கொள்வதன் மூலம், எந்த பயிர் செய்யலாம்; எந்த சத்து உள்ளது. எது பற்றாக்குறையாக உள்ளது என தெரிந்து கொள்ளலாம். தேவையில்லாத உரங்களை தவிர்த்து; சாகுபடி செலவை குறைக்கலாம்,'' என்றார்.

வேளாண் துணை இயக்குனர் இளங்கோ பேசியதாவது:

கோவை மாவட்டத்தில் அதிகபட்சமாக, சோளம் 35 ஆயிரம் எக்டேரில் பயிரிடப்படுகிறது. உளுந்து 15 ஆயிரம் எக்டேரில் பயிராகிறது. கணக்கெடுப்பு முடிந்தபின், ஒவ்வொரு கிராமம் வாரியாக ஆய்வு செய்து விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் தர திட்டமிட்டுள்ளோம். விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மண் மாதிரிகளை, மண் ஆய்வுக்கூடம், பூச்சிக்கொல்லி ஆய்வுக் கூடம், உரக்கட்டுப்பாடு ஆய்வு நிலையம் ஆகியவற்றின் மூலம் ஆய்வு செய்து, அதன் முடிவுகளுடன் ஒவ்வொரு விவசாயிக்கும், மூன்று ஆண்டுகளுக்கு திட்டமிட வசதியாக ஒருங்கிணைந்த கையேடு வழங்க உள்ளோம். முதல் கட்டமாக ஒரு ஒன்றியத்திற்கு, 500 கையேடு வீதம் 6,000 கையேடுகள், தயாராக உள்ளன.

இவ்வாறு, துணை இயக்குனர் பேசினார்.

எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கிருஷ்ணசாமி தலைமை வகித்து பேசினார். வேளாண் பல்கலை முதுநிலை மாணவ, மாணவியர் 35 பேர், இளநிலை மாணவ, மாணவியர் 80 பேர் என 115 பேர், கணக்கெடுப்பில் பங்கேற்றனர். 849 விவசாயிகளிடமிருந்து விபரங்களும்,

மண் மாதிரிகளும் சேகரிக்கப்பட்டன.
மண் மாதிரி ஆய்வு கட்டணமாக, 16,980 ரூபாய் வசூலிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளின் முடிவுகள், இரண்டு மாத காலத்திற்குள், விவசாயிகளின் வீடுகளில் வழங்கப்படும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மூலிகை பயிர் கூர்க்கன் வளர்க்க தயங்கும் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,03:10 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : கூர்க்கன் கிழங்கு எனப்படும் கோலியஸ் மூலிகைப்பயிர் அதிக லாபம் தரக்கூடியது. இதை வளர்க்க விவசாயிகள் ஆவலாக உள்ள நிலையிலும், அதை உரிய முறையில் சந்தைப்படுத்த வசதியில்லாமலும், வழிகாட்டுதல் இன்றியும் விவசாயிகள் தவிக்கின்றனர்.
மூலிகைப்பயிர் சாகுபடி அதிகரிக்க, தோட்டக்கலை துறையில் திட்டம் உள்ளது. தனியாக வளர்த்து பயன் பெற உதவும் வகையில் மூலிகைப் பயிர்களை பிரித்து மானியமும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. துளசி, வில்வம், சோற்றுக் கற்றாழை, நெல்லி, வேம்பு, வசம்பு, திப்பிலி, தூதுவளை, கீழாநெல்லி, கண்வலிக் கிழங்கு, சென்னா, சுடுகாட்டு மல்லி, பச்சவுலி, சர்க்கரைக் கொல்லி, எலுமிச்சைப்புல், மணத்தக்காளி, அமுக்கரான் கிழங்கு மற்றும் கூர்க்கன் கிழங்கு ஆகியன அரசின் மூலிகை பட்டியலில் உள்ளன.
இவற்றில் கோலியஸ் எனப்படும் கூர்க்கன், விவசாயிகளுக்கு அதிக லாபம் தரும் பயிராக உள்ளது. இந்த மூலிகைப் பயிர், மூட்டு வலி உள்ளிட்ட பல்வேறு வியாதிகளுக்கு மருந்து தயாரிக்கவும், அதிகளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியும் ஆகிறது. சேலம், நாமக்கல், வேலூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் இப்பயிர் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. அப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்கள், இவற்றை விவசாயிகளிடம் நேரடியாகக் கொள்முதல் செய்கின்றன.
தேவையான செடி மற்றும் உரங்களும் அந்நிறுவனங்களே வழங்குகின்றன. மேலும், இந்த உற்பத்திக்கு 20 சதவீதம் மானியமும் அரசு வழங்குகிறது. முதல்முறையாக, சாகுபடி செய்யும் நிலத்துக்கு மட்டும் உரமிட வேண்டும். வாரம் ஒரு முறை நீர்ப்பாய்ச்சினால் போதும். நுண்ணீர் பாசனம் செய்ய 65 சதவீத மானியத்துடன் நிதி உதவி வழங்கப்படுகிறது. கிழங்கு பயிர் என்பதால் கால்நடைகள் தொந்தரவும் இல்லை.
நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண், சரளை. மணல் கலந்த மண், செம்புரை மண், களியற்ற கரிசல் மண் என அனைத்து மண் வகையிலும் பயிரிடலாம். ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஆறு மாதத்தில், 10 டன் உற்பத்தி எடுக்க முடியும். கிலோவுக்கு 12 ரூபாய் என்ற அடிப்படையில் 1.2 லட்சம் ரூபாய் பெற முடியும். பனி மற்றும் மழையால் பாதிப்பு, களைகள்

பாதிப்பு போன்றவை ஏற்படாது. ஊடுபயிராகவும், விளைவிக்க முடியும்.
விவசாயிகளுக்கு குறுகிய காலத்தில் அதிகப் பயன்தரும் இம்மூலிகையை விளைவிக்க, திருப்பூர் மாவட்ட அளவில் விவசாயிகள் ஆவலாக உள்ளனர். ஆனால், இங்கு முறையான வழிகாட்டுதல் மற்றும் சந்தைப்படுத்தும் வசதியில்லாமல் அவர்கள் தவிக்கின்றனர். தோட்டக்கலைத்துறையினர், இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## வஞ்சிரம், வாவல் மீன் விலை அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,03:10 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : தென்மாவட்டங்களில் இருந்து வரத்து குறைந்துள்ளதால், திருப்பூர் நெய்தல் அங்காடியில் வஞ்சிரம், வாவல் மீன்கள் கிலோவுக்கு ரூ.20 முதல் 50 வரை விலை அதிகரித்தது. பவானி ஆற்றில் இருந்து மீன் வரத்து இரு மடங்கு அதிகரித் துள்ளது.திருப்பூர் நெய்தல் அங்காடிக்கு
தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து கடல் மீன், பவானி, பாலாறு உள்ளிட்ட ஆறு, அணை பகுதி
களில் இருந்து ஆற்று மீன் விற்பனைக்கு வருகிறது. குமார் நகர், அவிநாசி, புஸ்பா தியேட்டர் ஸ்டாப், வீரபாண்டி ஆகிய நான்கு அங்காடிகளுக்கு வாரம்தோறும் சராசரியாக இரண்டு டன் மீன் வரத்து இருக்கும்; 2.5 லட்சம் ரூபாய் வரை மீன் வர்த்தகம் நடந்து வந்தது.
சீதோஷ்ண நிலை மாற்றத்தால், மீன் வளர்ப்பு பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால், உள்ளூர் தேவை அதிகரித்துள்ளது. இம் மாதம் துவக்கம் முதல் நெய்தல்
அங்காடிக்கு கடல் மீன் வரத்து குறைந்து
வருகிறது; மீன் விற்பனையும் ஒரு டன்னாக குறைந்துள்ளது. நல்ல சதைப்பற்று காரணமாக, பெரும்பாலானோர்
அதிகளவு வாங்கும் வஞ்சிரம், வாவல் மீன்கள் வரத்து 80 சதவீதம் வரை குறைந்துள்ளது. இதையடுத்து, வஞ்சிரம்
கிலோவுக்கு 50 ரூபாய்; வாவல் 20 ரூபாய் விலை ஏற்றம் பெற்றுள்ளது. மற்ற மீன்கள் விலை கிலோவுக்கு 2 முதல் 5 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.
நெய்தல் அங்காடியில் நேற்று வஞ்சிரம் 500; அயிலை 60; வாவல் 380; இறால் 400; சங்கரா 210; கெழுத்தி 170 ரூபாயாக அனைத்து கடல் மீன் விலை உயர்ந்து காணப்பட்டது. தண்ணீர் திறப்பு காரணமாக அணை நீர்மட்டம் குறைந்துள்ளதால், ஆற்று மீன் பிடிப்பு அதிகரித்துள்ளது.
வழக்கமாக, பவானி ஆற்றில் இருந்து அங்காடிக்கு நாளொன்றுக்கு 300 கிலோ வரத்து இருக்கும்

ஆற்றுமீன், 600 கிலோவாக அதிகரித்துள்ளது. ஆனால், விலையில் எவ்வித மாற்றமின்றி சீராக உள்ளது.

## ஊட்டியில் மலைவாழ் மக்களுக்காக தாவரங்கள் சாகுபடி பயிலரங்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,02:36 IST

கருத்தை பதிவு செய்ய

மேட்டுப்பாளையம் : முழுமையாக பயன்படுத்தப்படாத தாவரங்களின் அறிமுகம் மற்றும் சாகுபடி பற்றிய பயிலரங்கம், ஊட்டியில் ஆதிவாசி மற்றும் மலைவாழ் மக்களுக்காக வரும் 8,9 தேதிகளில், இலவசமாக நடத்தப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், இந்திய வேளாண்மை ஆராய்ச்சி குழுமத்துடன் இணைந்து, மலைவாழ் மற்றும் ஆதிவாசி மக்களுக்கு, இலவச பயிலரங்கம் நடத்துகிறது. இதில், முழுமையாக பயன்படுத்தப்படாத தாவரங்களின் அறிமுகம் மற்றும் சாகுபடி பற்றி, வரும் 8, 9 தேதிகளில், ஊட்டி சேரிங் கிராஸ்சில் உள்ள மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட பயிற்சிக் கூடத்தில், பயிலரங்கம் நடக்கிறது.

தானியக்கீரை, அரிசிப் பயறு, அன்னாட்டோ சாயமரம், சொர்க்க மரம் ஆகியவற்றின் சாகுபடி குறிப்புகள், அதன் பயன்பாடுகள், மதிப்புக்கூட்டு தொழில்நுட்பங்கள், வேளாண் காடுகளில் ஊடுபயிராக வளர்ப்பது பற்றி, வனக்கல்லூரி விஞ்ஞானிகள், பேராசிரியர்கள் ஆகியோர், பயிற்சி அளிக்கின்றனர். இப்பயிற்சி முகாமில், பங்கேற்க விருப்பமுள்ள, மலைவாழ் மற்றும் ஆதிவாசி மக்கள், தங்கள் பெயரை முன்பதிவு செய்து பயன்பெறலாம். முதல்வர், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,மேட்டுப்பாளையம் என்ற முகவரிக்கு தபால் மூலமோ, திட்ட அலுவலர் குமரனுடன், 04254 222010, 271513, 94433 77970, 99761 42443 என்ற போன் மூலமோ தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை, வனக்கல்லூரி முதல்வர் துரைராசு தெரிவித்துள்ளார்.

## பதனீருக்கு விலை இல்லாததால் விவசாயிகள் வேதனை

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,21:50 IST

கருத்தை பதிவு செய்ய

ஸ்ரீவில்லிபுத்தூர் :விலைவாசி அதிகரித்தும், பதனீருக்கான கொள்முதல் விலையை அதிகரிக்காததால், ஸ்ரீவி.,பகுதியில், பனை மரங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை, மம்சாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும்

அதிகமான பனை மரங்கள் உள்ளன.
இதை நம்பி ஆயிரக்கணக்கான தொழிலாளர் வாழ்க்கை நடத்துகின்றனர். இதில் பிப். முதல் ஆகஸ்ட் முதல் வாரம் வரை பதனீர் வரத்து இருக்கும்.
இதை பனை தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் விற்பனை செய்வர். இதற்காக லிட்டருக்கு ரூ. 10 வழங்கப்படுகிறது. சிலர் கருப்பட்டியாக்கி விற்பனை செய்வர்.
இதை கூட்டுறவு சங்கங்கள் மார்க்கெட் நிலவரப்படி கொள்முதல் செய்கின்றன.
இந்நிலையில், பிப்., முதல் வாரம் துவங்க வேண்டிய பதனீர் உற்பத்தி தாமதமாக கடைசி வாரத்தில் துவங்கியது. இருந்தும் பதனீர் கொள்முதல் விலை ஏறவில்லை. இதனால் பனை விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர்.
விவசாயி மாடசாமி, ""ஸ்ரீவி., சுற்று பகுதியில் கடந்த பத்தாண்டுக்கு முன் இருந்த பனை மரங்கள் தற்போது இல்லை.
பஸ் கட்டணம் உயர்வு, என அனைத்து பொருட்களுக்கும் விலை ஏறி விட்டது. ஆனால் லிட்டர் பதனீர் கடந்த இரண்டு ஆண்டுகளாக , ரூ.பத்து ரூ க்குதான் கொள்முதல் செய்யப்படுகிறது.
பனை ஏறுவதற்கு ஆட்கள் கிடைப்பது இல்லை. விலை வாசிக்கு தகுந்தபடி, பதனீர் கொள்முதல் விலையை அதிகரிக்க வேண்டும்," என்றார்.

## புளியரை, புதூரில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : மார்ச் 06,2012,00:35 IST

கருத்தை பதிவு செய்ய

புளியரை :புளியரை, புதூரில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

செங்கோட்டை வட்டாரம் புளியரை மற்றும் புதூரில் விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் கனகம்மாள் தலைமை வகித்து பேசும் போது, உளுந்து பயிர்களுக்கான சாகுபடி முறையை கடைபிடிக்க வேண்டிய அவசியம் பற்றியும், உளுந்து பயிர் விளைச்சல் போட்டியில் அதிகமாக விவசாயிகள் பங்கு பெற்று நல்ல மகசூல் எடுப்பது குறித்தும் விளக்கினார்.
துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் பேசும்போது, உளுந்து பயிர் சாகுபடி முறை பற்றியும், அதிக மகசூல் எடுப்பதற்கு டி.ஏ.பி.,2 சதவீத கரைசல் இருமுறை தெளிப்பது பற்றியும் விளக்கினார். விதை சான்று அலுவலர் அசோகன் பேசும்போது, குறைந்த பட்ச முளைப்பு திறன்,

பிற ரக கலவன் அனுமதி, ஈரப்பதம் இருக்க வேண்டிய அளவு, விதைச்சான்று நடைமுறைகள் பற்றி விளக்கினார். விவசாயிகள் வயல் வெளிக்கு அழைத்து செல்லப்பட்டு செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் மாரியப்பன், சிக்கந்தர் அமீன் செய்திருந்தனர்.

**விவசாய கடன் நிர்ணய கூட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 05,2012,21:51 IST

கருத்தை பதிவு செய்ய

விருதுநகர் :"" மாவட்ட தொடக்க கூட்டுறவு வங்கிகளில் , விவசாய கடன் வழங்குவதற்கான குறியீடு நிர்ணய கூட்டம், வட்டார வாரிய நடக்கவுள்ளதாக," கலெக்டர் மு.பாலாஜி கூறினார்.

அவர் கூறியதாவது: கடன் வழங்க குறியீடு நிர்ணய கூட்டம்,நரிக்குடியில் மார்ச் 7, எம்.ரெட்டியபட்டி 8, காரியாபட்டி 9, அருப்புக்கோட்டை 13, சாத்தூர் 14, விருதுநகர் 15, சிவகாசி 20, வெம்பக்கோட்டை 21, வத்திராயிருப்பு 22, ராஜபாளையம் 27, ஸ்ரீவில்லிபுத்தூரில் 28 ம் தேதி என,ஒன்றிய அலுவலங்களில், மாலை 3.30 மணிக்கு நடக்கவுள்ளது.

கூட்டுறவு, வேளாண், கால்நடை, தோட்ட கலை, பொதுப்பணித்துறை அதிகாரிகள் பங்கேற்பர். விவசாய கடன், இதர துறை சார்பில் செயல்படுத்தப்படும் சேவைகள் குறித்து பரிசீலனை செய்யப்பட்டு, குறியீடு நிர்ணயிக்கப்படவுள்ளன. விவசாயிகளும் ஆலோசனை வழங்கலாம், என்றார்.

---

தினகரன்

**எண்ணை பனை சாகுபடிக்கு ரூ50 ஆயிரம் மானியம் அறிவிப்பு**

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-05 12:06:10

கடலூர்: கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கடலூர் மாவட்டத்தில் வேளாண்மை துறை மூலம் எண்ணை பனை சாகுபடி அபிவிருத்தி திட்டம் செயல்பட்டு வருகிறது. குறைந்த அளவு ஆட்களை கொண்டு குறைந்த பராமரிப்பு செலவில் எண்ணை பனை பயிரினை பயிரிடலாம். 3 ஆண்டுகள் வரை கன்றுகள் பராமரிப்பிற்கான இடுபொருட்கள் வேளாண்மை துறை மூலம் வழங்கப்படுகிறது. 4ம் ஆண்டு முதல் தொடர்ந்து 30 ஆண்டுகள் வரை குறைவின்றி விவசாயிகள் நல்ல மகசூல் பெறலாம்.
நடவு செய்யும் செலவினத்திற்காகவும் பராமரிப்பதற்காகவும் ஹெக்டேருக்கு ரூ.6 ஆயிரம் விவசாயிகளுக்கு வேளாண்மை துறையின ரால் வழங்கப்படுகிறது. இரண்டு எக்டர் பரப்பிற்கு புதிதாக எண்ணைபனை பயிரிடும் விவசாயிக்கு புதி தாக போர்வெல் அமைக்க ரூ.50 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.
சொட்டு நீர் பாசனம்அமைப்பதற்கு ஹெக்டேருக்கு ரூ.15 ஆயிரம் மானியமும், சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ள விவசாயிகளுக்கு பம்செட் வாங்குவதற்கு ரூ.10 ஆயிரம் மானியமும் வேளாண்மை துறை மூலம் வழங்கப்படுகிறது. இது போன்று எண்ணைபனையில் ஊடுபயிர் செய்யவும், மண்புழு உர உற்பத்திக்கும் மானியம் வழங்கப்படுகிறது. ஆர்வமுள்ள விவசாயிகள் அருகிலுள்ள வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலர்களை அணுகி மேற்படி திட்டங்களின் மூலம் பயன் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## அட்மா திட்டத்தின் கீழ் வேப்பந்தட்டையில் பண்ணை பள்ளி வயல்விழா விவசாயிகள் பங்கேற்பு

கருத்துகள்

பதிவு செய்த நேரம்:2012-03-05 11:15:43

வேப்பந்தட்டை: அட்மா திட்டத்தின் கீழ் வேளாண் அறிவியல் மையம் சார்பில் பண்ணை பள்ளி வயல்விழா வேப்பந்தட்டையில் நடந்தது.
பெரம்பலூர் மாவட்ட அட்மா திட்ட இயக்குனர் பரிந்துரையின் பேரில், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் சார்பில் நெல்லில் பண்ணை பள்ளி பயிற்சி வகுப்பு நடைபெற்றது. 25 விவசாயிகள் கலந்துகொண்டு கடந்த 6 வாரங்களாக பயிற்சி பெற்றனர்.
முதல் வகுப்பில் நெல்லில் நுண்ணறிவு பரிசோதனை பற்றியும், 2ம் வகுப்பில் மண் மற்றும் நீர் பரிசோதனையின் அவசியம், மண் மாதிரி எடுத்தல், நீர் மாதிரி எடுத்து அதன் தன்மையை கண்டறிதல் ஆகியன குறித்த செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.
3வது வகுப்பில் விதை தேர்வு, விதை நேர்த்தி ஆகியன பற்றியும், 4வது வகுப்பில் நாற்றங்கால் பராமரித்தல், நடவு மற்றும் நீர் நிர்வாகம் குறித்தும், 5வது வகுப்பில் உரம் மேலாண்மை, களை நிர்வாகம், வயல் சூழல் ஆய்வு குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.
பண்ணை பள்ளியின் நிறைவாக வயல்விழா நடைபெற்றது. இதில் நெல் வயலில் ஏற்படும் பூச்சி மற்றும் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த மருந்து தெளிக்கும் முறை. ஒருங்கிணைந்த பூச்சி, நோய்

கட்டுப்பாடு ஆகியன பற்றி விவசாயிகள் செயல் விளக்கம் மூலம் செய்து காண்பித்தனர். பயிற்சி வயல்வெளியில் நடத்தப்பட்டதால் பூச்சி மருந்து தெளிக்கும் விதம், ஏக்கருக்கு தேவைப்படும் அளவு மற்றும் தெளிக்கும் முறைகள் குறித்து நேரடியாக விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து,
தொழில்நுட்ப வல்லுனர் விஜயலட்சுமி, வேப்பூர் வேளாண்மை உதவி அலுவலர் அய்யாசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

தினத் தந்தி

## *பிப்ரவரியில் 13% வளர்ச்சி இந்தியாவின் காபி ஏற்றுமதி 35,555 டன்னாக உயர்வு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*கடந்த பிப்ரவரி மாதத்தில் இந்தியாவின் காபி ஏற்றுமதி, சென்ற ஆண்டின் இதே மாதத்தைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகரித்து 31,567 டன்னிலிருந்து 35,555 டன்னாக உயர்ந்துள்ளது.*

*அராபிகா காபி*

*இதில் ரோபஸ்டா வகை காபி ஏற்றுமதி வியக்கத்தக்க வகையில் 33 சதவீதம் அதிகரித்து 28,002 டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், அராபிகா வகை காபி ஏற்றுமதி 23 சதவீதம் சரிவடைந்து 12,799 டன்னாக குறைந்துள்ளது. கடந்த 2011–ஆம் ஆண்டில் நவம்பர் மாத இறுதியிலிருந்து டிசம்பர் மாதத்தின் முதல் வாரம் வரை கடும் மழை பெய்ததால் அராபிகா*

வகை காபி உற்பத்தி குறைந்துள்ளது.
காபி வாரியம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் வாயிலாக இது தெரிய வந்துள்ளது.
நடப்பு 2012–ஆம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் காபி ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 10 சதவீதம் அதிகரித்து 51,612 டன்னிலிருந்து 56,524 டன்னாக உயர்ந்துள்ளது. அதேசமயம், மதிப்பின் அடிப்படையில் இது 16 சதவீதம் அதிகரித்து ரூ.739.78 கோடியிலிருந்து ரூ.856.26 கோடியாக உயர்ந்துள்ளது.

ரூபாய் மதிப்பு

சர்வதேச அளவில் காபியின் விலை அதிகரிக்காத நிலையிலும், ரூபாய் மதிப்பு அடிப்படையில் ஏற்றுமதி மிகவும் உயர்ந்துள்ளது. இந்திய ரூபாய்க்கு எதிராக அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்ததுதான் இதற்கு காரணமாகும் என்று இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.
இத்தாலி, ஜெர்மனி, ரஷ்யா, பெல்ஜியம், ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கு இந்தியா காபியை அதிக அளவில் ஏற்றுமதி செய்கிறது. ஏற்றுமதி வளர்ச்சியால் நாட்டின் அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரித்து பொருளாதார வளர்ச்சி மேம்படும்.

## தானிய உற்பத்தியை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கை வெளிநாடுகளில் விவசாயம் செய்யும், இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவு அளிக்க திட்டம்



தீரஜ் திவாரி – ரிதுராஜ் திவாரி,புதுடெல்லி

இந்தியாவில் பருப்பு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்க்கு கடும் பற்றாக்குறை நிலவி வருகிறது. எனவே, இதனை எதிர்கொள்ளும் வகையில் வெளிநாடுகளில் விளைநிலங்களை வாங்கி விவசாயம் செய்யும் இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவு அளிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

வேளாண் அமைச்சகம்

மத்திய வேளாண் அமைச்சகம் இதற்காக இதர அமைச்சங்களின் ஆலோசனைகளை கோரியுள்ளது. இதன்படி, வெளிநாடுகளில் நிலங்களை வாங்கி வேளாண் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வேளாண் விளைபொருள்களை வாங்குவதற்கு உத்தரவாதம் அளித்தல் உள்ளிட்ட ஆதரவுகளை மத்திய அரசு வழங்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் துறையைச் சேர்ந்த யெஸ் பேங்கின் துணைத் தலைவர் (உணவு மற்றும் வேளாண் பிரிவு) கிரீஷ் அய்வள்ளி இது குறித்து கூறும்போது, “பருவநிலை கோளாறுகளால் சர்வதேச அளவில் வேளாண் உற்பத்தி குறைந்து உணவு தானியங்கள் விலை உயர்ந்து வருகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில் அனைத்து நாடுகளும் வெளிநாடுகளில் வேளாண் உற்பத்தியை மேற்கொள்வது குறித்து தீவிரமாக பரிசீலனை செய்து வருகின்றன. நம் நாட்டில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கு மத்திய அரசு ஆதரவு அளிக்கும் நிலையில் எமது வங்கியும் இந்நிறுவனங்களுக்கு கடன் உதவி அளிக்கும். வங்கி வெளிநாடுகளில் நிலம் வாங்குவதற்கு ஐந்து நிறுவனங்களுக்கு ஏற்கனவே ஆலோசனை வழங்கியுள்ளது” என்று தெரிவித்தார்.

சமையல் எண்ணெய்

இந்திய சமையல் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம், லத்தீன் அமெரிக்காவில் நிலங்களை வாங்குவதற்காக ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இந்தியா சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதத்தை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. கடந்த 2010–11–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவின் தாவர எண்ணெய் இறக்குமதி (சமையல் எண்ணெய் + சாதாரண எண்ணெய்) 17 சதவீதம் அதிகரித்து 660 கோடி டாலராக (ரூ.33,000 கோடி) உயர்ந்துள்ளது.

பருப்பு வகைகள்

மேலும், பருப்பு வகைகள் உற்பத்தி குறைந்து வருவதையடுத்து, அதன் இறக்குமதி அதிகரித்து வருகிறது. உலக அளவில் பருப்பு வகைகள் இறக்குமதியில் நம் நாட்டின் பங்கு 15 சதவீதமாக உள்ளது. கடந்த 2009–10–ஆம் நிதி ஆண்டில் 35.10 லட்சம் டன்னாக இருந்த பருப்பு வகைகள் உற்பத்தி 2010–11–ஆம் நிதி ஆண்டில் 26.90 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. பருப்பு வகைகள் பயன்பாடு அதிகரித்து வருவதையடுத்து, நடப்பு நிதி ஆண்டில் இதன் இறக்குமதி 28 லட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, வெளிநாடுகளில் நிலங்கள் வாங்கி விவசாயம் செய்யும் திட்டத்தை பொருளியல் நிபுணர்கள் வரவேற்றுள்ளனர்.

## பாமாயில் மீதான இறக்குமதி வரியை உயர்த்த கோரிக்கை

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு,மும்பை

சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி அதிகரித்து வருவதையடுத்து, உள்நாட்டு நிறுவனங்களின் நலனை பாதுகாக்கும் வகையில் பாமாயில் மீதான இறக்குமதி வரியை தற்போதைய 7.5 சதவீதத்திலிருந்து 16.5 சதவீதமாக உயர்த்தும்படி சமையல் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

சோயா எண்ணெய்

*நாட்டின் சமையல் எண்ணெய் தேவைப்பாட்டில் 50 சதவீதம் இறக்குமதி செய்யப்படுகிறது. பாமாயில் இந்தோனேஷியா மற்றும் மலேசியாவிலிருந்தும், சோயா எண்ணெய் பிரேசில் மற்றும் அர்ஜென்டினாவிலிருந்தும் இறக்குமதி ஆகிறது.*

*இந்தியாவில் உள்ள வர்த்தக வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் கடந்த 2011–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் மீதான ஏற்றுமதி வரியை ரத்து செய்தும், கச்சா பாமாயில் மீது 16.5 சதவீத ஏற்றுமதி வரி விதித்தும் இந்தோனேஷியா நடவடிக்கை எடுத்தது.*

*இந்நிலையில், பிப்ரவரி மாதத்தில் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் இறக்குமதி சராசரி அளவான 1.10 லட்சம் டன்னை காட்டிலும் இரு மடங்கிற்கு மேல் (2.50 லட்சம் டன்) அதிகரித்தது. இனிவரும் காலங்களிலும் இதே நிலை தொடர்ந்தால் அது உள்நாட்டு சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.*

*ரூ.10,000 கோடி முதலீட்டை பெற்று, சுமார் 5 லட்சம் பணியாளர்களின் வாழ்வாதாரமாக உள்ள இத்துறையின் நலனை பாதுகாக்க பாமாயில் மீதான இறக்குமதி வரியை 16.5 சதவீதமாக அதிகரிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சமையல் எண்ணெய் உற்பத்தியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.*

*பாமாயில் விலை*

*இதேபோன்று, இறக்குமதியாகும் சுத்திகரிக்கப்பட்ட பாமாயில் விலையை, தற்போதைய சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப டன் ஒன்றிற்கு ரூ.60,000–ஆக (1,200 டாலர்) நிர்ணயம் செய்யவும் கோரப்பட்டுள்ளது.*

## குன்னூர் ஏல மையத்தில் 21 சதவீத தேயிலை தூள் தேக்கம்

*குன்னூர், மார்ச்.6–*

*குன்னூர் தேயிலை ஏலத்தில் 21 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*தேயிலை ஏலம்*

*குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பினர் நடத்தும் தேயிலை ஏலம் வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் நடைபெறுகிறது. விற்பனை எண் 9–க்கான ஏலம் கடந்த 1,2 ஆகிய தேதி களில் நடைபெற்றது.*

*ஏலத்திற்கு மொத்தம் 10 லட்சத்து 70 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 7 லட்சத்து 66 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 3 லட்சத்து 4 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*21 சதவீதம் தேக்கம்*

*ஏலத்தில் உள்நாட்டு வர்த்தகம் சுமாரான நிலையில் இருந்தது. ஏற்றுமதியாளர் களை பொறுத்த வரை ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய இரு நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே ஏலத்தில் பங்கு பெற்றனர்.*

*ஏலத்தில் தேயிலை தூளுக்கு தேவை இல்லாத காரணத் தால் 3 ரூபாய் விலை வீழ்ச்சி அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ஏற்பட்டது. ஏலத்தில் மொத்த தேயிலை தூளின் அளவில் 21 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக ரூ. 169–ஆக இருந்தது. ஆர்தோ டக்ஸ் தேயிலை தூள் ரூ.226 உயர்ந்த பட்ச விலையாக ஏலம் சென்றது.*

*சராசரி விலை யாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.50–ல் இருந்து ரூ.55 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.85–ல் இருந்து ரூ.145 வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரகத் தின் சாதாரண வகை 55 ரூபாயில் இருந்து 58 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 143 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*அடுத்த ஏலம்*

*விற்பனை எண் 10–க்கான ஏலம் வருகிற 8, 9 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத் திற்கு மொத்தம் 10 லட்சத்து 46 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*

கொலக்கம்பை பகுதி

# விவசாயிகளுக்கு லாபம் தரும் காப்பி சாகுபடி



கொலக்கம்பை பகுதியில் ஒரு விவசாயின் தோட்டத்தில் காப்பி காய்கள் காய்த்து குலுங்குவதை படத்தில் காணலாம்.

கொலக்கம்பை, மார்ச்.6–

கொலக்கம்பை பகுதியில் தற்போது காப்பி காய்கள் காய்த்து குலுங்குவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## மாற்று விவசாயம்

நீலகிரி மாவட்டத்தில் பணப்பயிராக விளங்கி வந்த தேயிலைக்கு கடந்த சில வரு டங்களுக்கு முன்பு கடுமை யான விலை வீழ்ச்சி ஏற்பட் டது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வந்தனர்.

இதனால் நீலகிரி மாவட்டத் தில் உள்ள சிறு, குறு விவ சாயிகள் மாற்றுப்பயிர் செய்ய முடிவு செய்யப்பட்டு சிலர் காப்பி செடிகளையும், சிலர் மலை தோட்ட காய்கறி பயிர்கள், கொய்மலர் சாகுபடி என மாற்று விவசாயத்தை மேற்கொண்டு அதன் மூலம் தங்கள் குடும்பங்களை பராமரித்து வருகின்றனர்.

## ஊடுபயிர்

இதன்படி கொலக்கம்பை அருகே உள்ள ஆருக்குச்சி, அறையட்டி, கெரடாலீஸ், கெந்தளா உள்ளிட்ட பகுதி களில் தேயிலை தோட்டங் களின் இடையே ஊடு பயிராக காப்பி செடிகளை நடவு செய்து, அதன் மூலம் வரு மானம் ஈட்டி வருகின்றனர்.

இந்த செடிகளில் தற்போது காப்பி பழங்கள் அதிகளவு காய்க்க தொடங்கி உள்ளது. இதனை அறுவடை செய்து , காய வைத்து அரைத்து காப்பி தூளை தயாரிக்கின்றனர். இதனை தமிழகம் மட்டுமல் லாமல் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

## கொள்முதல்

தற்போது காப்பி தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.80 முதல் ரூ.110 வரை விற்பனையாகி வருகிறது. இதனை வியாபாரி கள் சிலர் நேரடியாக இந்த பகுதிகளுக்கு வந்து கொள்முதல் செய் கிறார்கள்.

இதனால் தேயிலை விவசாயத்தால் பாதிக்கப் பட்ட விவசாயிகள் இதன் மூலம் வருமானம் ஈட்டி வருகின்றனர். எனவே அரசு இந்த விவசாயிகளை ஊக்கு விக்கும் வகையில் வங்கி கடன்கள் மற்றும் ஆலோசனை கள் வழங்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.



கொலக்கம்பை பகுதியில் ஆரஞ்சு பழ மரங்களை மர்ம நோய் தாக்கியதால், மரங்கள் பட்டுப்போய் காட்சி அளிப்பதையும், அந்த இடத்தில் மாற்று பயிரிட விவசாயிகள் தயார் செய்துள்ளதையும் படத்தில் காணலாம்.

**கொலக்கம்பை பகுதியில்**

# ஆரஞ்சு பழ மரங்களை தாக்கும் 'மர்ம' நோய்

கொலக்கம்பை, மார்ச்.6-

கொலக்கம்பை பகுதி யில் ஆரஞ்சு பழ மரங்களை தாக்கும் மர்ம நோயால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

### பழங்கள்

நீலகிரிமாவட்டத்தில் தேயிலை, காய்கறிகள் சாகுபடி மற்றும் கொய்மலருக்கு அடுத்தபடியாக பழங்கள் அதிகளவு உற்பத்தி செய்யப் படுகின்றன. இங்கு விளைவிக்கப்படும் பழங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்படுகிறது.

நீலகிரியில் பிளம்ஸ், ஆப்பிள், ஸ்ட்ராபெர்ரி, வாட்டர் புரூட், ஆரஞ்சு உள்ளிட்ட பல்வேறு பழ வகைகள் உற்பத்தி செய்யப் படுகின்றன. இதில் கொலக் கம்பை பகுதிகளில் உள்ள விவசாயிகள் சுமார் ஆயிரம் ஹெக்டேர் பரப் பளவில் தேயிலை செடிகளுக்கு நடுவே ஆரஞ்சு மரங்களை வளர்த்து வருகின்றனர்.

### மர்ம நோய் தாக்குதல்

ஆண்டுக்கு 2 முறை இந்த மரங்களில் ஆரஞ்சு பழங்கள் காய்க்கும். இங்கு அறுவடை செய்யப்படும் ஆரஞ்சு பழ மரங்களை ஊட்டி, கோவை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பழ மண்டிகளுக்கு விவசாயிகள் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் உள்ள ஆரஞ்சு பழ மரங்களில் மர்ம நோய் தாக்கி வருகிறது. இந்த நோய் காரணமாக ஆரஞ்சு மரங்களில் உள்ள இலைகள் உதிர்ந்து விட்டன. அதன் பிறகு மரங்களில் ஆரஞ்சு பழங் கள் காய்க்காமல் போனது. இதனால் இதை நம்பியிருந்த விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளான துடன், இந்த மரங்களில் மீண்டும் ஆரஞ்சு பழங்கள் காய்ப்பதற்காக மர்ம நோய் குறித்து கண்டறிய வேண்டும் என்று விவசாயிகள் சம்பந்தப்பட்ட துறைக்கு கோரிக்கை விடுத்து வந்தனர்.

### வெட்டி விற்று விட்டனர்

இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் போதிய நடவடிக்கை எடுக்காததால் பாதிப்படைந்த விவசாயிகள் சிலர் ஆரஞ்சு பழ மரங்களை விறகுக்காக வெட்டி விற்று விட்டனர். காய்ந்து போனதால் மரங்களை அகற்றி விட்டு, மலை தோட்ட காய்கறி பயிர்களான பீன்ஸ், உருளைக் கிழங்கு உள்ளிட்டவைகளை பயிரிட்டு வருகின்றனர்.

மேலும் சில விவசாயிகள் மேரக்காய் பயிரை விவசாயம் செய்து பந்தலிட இந்த மரங் களை பயன்படுத்தி வருகின்றனர். எனவே தோட்டக் கலை துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து கொலக்கம்பை பகுதியில் ஆரஞ்சு பழங்களை மீண்டும் உற்பத்தி செய்ய வசதியாக நல்ல தரமான ஆரஞ்சு பழமர நாற்றுகளை குறைந்த விலையில் வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.